1974 சனவரி 28]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தொழிற்சாலே தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, மீண்டும் மறுபரிசீலனை செய்வதற்கு ஏதாவது தனிக் காரணம் இருக்கிறதா ? அரசாங்கம் அதுபற்றி ஏதாவது ஆட்சேபனை தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையிலே இதுபற்றி நமது அரசுத் தரப்பில் ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறோம். அனுமதி கொடுத்ததற்குப் பின்னால் மறு பரிசீலனை செய்வது சரியல்ல. அதுவும் அரசாங்கம் ஆரம்பித்த தொழிற்சாலைக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறோம்.

திரு. த. சோனையா : இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிற இடம் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாகும். பிற்படுத்தப்பட்ட பகுதி யாகிய மணலூரில் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வற்புறுத்தி, அங்கே அந்தத் தொழிற்சாலையை உடனே ஏற்பாடு செய்வதற்கு அரசு ஏதாவது விசேஷ ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடத்திலே ஆரம்பிக்கப் கூடாது என்ற கருத்தும் மத்திய அரசினிடம் இருக்கிறது. ஆகவே, இடமும் மறுபரிசீலனை செய்யப்படும்.

சென்னையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குக் கடன்

* 198 வின—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டில், சென்னையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி சங்கத்துக்கு நூல் வாங்குவதற்கென அரசு கடன் தொகை ரூபாய் 10,000 வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினவிற்கு இடமில்லை.

பீங்கான், மட்பாண்டங்கள் தொழில் பிரிவு.

* 199 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) பீங்கான், மட்பாண்ட தொழிலுக்காக கார்ப்பரேஷன் ஒன்று துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

[1974 சனவரி 28

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) and (இ): திருமழிசையிலுள்ள அரசுத்துறையில் நடத்தி வரும் விசை செங்கற் சூளையை நடத்துவதற்கும் வீட்டு வசதி வாரியத்தினுடைய விசை செங்கற் சூளையையும் அமைப்பதற்காகவும் ஒரு தனி நிறுவனம் "தமிழ்நாடு ஸெராமிக்ஸ் லிமிடெட்" என்ற கம்பெனியை அமைக்க 1973-ம் ஆண்டு மார்ச்சு திங்களில் அரசு ஆணையிட்டது. அரசுத் துறையிலும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திலும் உள்ள பீங்கான் மற்றும் மட்பாண்ட தொழிற்சாலைகளை இந்நிறுவனத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டு அவைகளைப் பற்றிய விவரங்கள் ஆய்விலுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த நிறுவனத்தைத் துவக்குகின்ற நேரத்தில் நம்முடைய நாட்டில் தயார் செய்கின்ற பீங்கான் மண்பாண்டங்களுக்கு வெளி நாடுகளில் அதிக கிராக்கி இருக்கிறதே, அதைக் கருத்தில் கொண்டு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய தக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கார்ப்பரேஷன் புதிய தாகத் தொடங்கப் போகிறோம். அது அல்லாமல் இப்பொழுதே டான்ஸி ப்ராக்டக்ட்ஸை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: விருத்தாசலத்தில் ஒரு பீங்கான் யூனிட் இருக்கிறதே அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது. அது இயங்கிக்கொண்டு இருக்கிறதா ? அதிலுள்ள உத்தியோகஸ்தர்கள் அங்கு வேலை செய்து வருகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த யூனிட் செயல்பட்டு வருகிறது. அந்த யூனிட்டும் கார்ப்பரேஷனில் வரும் என்று நான் ஏற்கெனவே சொன்னேன்.

திரு. ஆ. பரந்தாமன்: பீங்கான் சாமான்களின் பை-பிராடக்டைக் கொண்ட ஸ்டோன் வேர் பைப்ஸ் தொழிற்சாலை ஒன்று டான்ஸி நிறுவனத்தின் கீழ் விருத்தாசலத்தில் சிறப்பாக செயல்படுகிறது. வேறு இன்னொரு தொழிற்சாலை, ஸ்டோன்வேர் பைப்ஸ் தொழிற்சாலை தமிழ்நாட்டில் ஏற்படுத்துவதற்கு டான்ஸி நிறுவனம் மத்திய அரசாங்கத்திற்கு மனுச் செய்துள்ளார்கள். அதற்கு லெட்டர் ஆஃப் இன்டென்ட் கொடுத்துவிட்டார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி: இந்தப் பீங்கான் மண்பாண்டங்கள் தயார் செய்வதற்கு மிக அடிப்படைத் தேவையான பெல் ஸ்பேர் ஸ்குவார்ட்ஸ் நம்முடைய நாட்டில் ஏராளமாக இருப்பதாகவும், ஏறக்குறைய உலகம் பூராவுக்கும் இந்தப் பொருள்கள் நம்மாலே விநியோகம் செய்யப்படலாம் என்றும் இங்கே ஆராய்ச்சியாளர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல், வட ஆற்காடு மாவட்டம், கரூர் போன்ற பகுதிகளில்

இந்தப் பொருள்களை தூள் செய்வதற்கு தேவையான இயந்திரங்கள் 1,000 மெஷ், 2,000 மெஷ் பவுடர் செய்யக்கூடிய இயந்திரங்கள் ஆசியாவில் இல்லாத காரணத்தினால் இந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக் கிறது. ஆகவே, ஜப்பான் நாட்டிலிருந்து இந்த இயந்திரங்களைக் கொண்டு வந்து இந்தப் பொருள்களிலிருந்து இப்படிப்பட்ட தூள் தயாரிப்பதற்கு அதையும் நம்முடைய அரசாங்கம் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸிராமிக் இண்டஸ்டிரிக்கு ஒரு நல்ல எதிர் காலம் இருக்கிறது. புதியதாக வாரியம் துவங்குகின்ற பொழுது அந்த வாரியம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கருத்துக்களையும் பரிசீலிக்கும்.

திரு. த. சோனையா : தமிழ்நாட்டிலே மண் பாண்டங்கள் செய் வதிலே சிறப்பான இடமாக இருக்கிறது என்று பலராலே போற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட இடம் மானாமதுரை. மானாமதுரை மண் பாண்டங்களைச் செய்கின்ற ஆயிரக்கணக்கான நல்ல தொழில் நிபுணர்கள் இருக்கின்ற இடம். அரசாங்கம் மண்பாண்டத் தொழிற் சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டும். ஆகவே, அரசு அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதையும் இந்த வாரியம் பரிசீலிக் கலாம்.

State Man-power Officers' Conference

* 200 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether representatives of the State attended the States Man-power Officers' Conference in New Delhi about November 1972;

(*b*) if so, the detais thereof; and

(*c*) the details of the decisions taken.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), and (இ) : ஆம். புது டில்லி யில் 1972–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ம் தேதி முதல் 28–ம் தேதி வரை நடந்த மாநில மனிதத் திறன் அலுவலர்கள் மாநாட்டில், இந்த அரசின் சார்பாக முன்னுள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலாளர் திரு. எம். எம். ராஜேந்திரன், ஐ. ஏ.எஸ். கலந்து கொண்டார்.

(உ) இம் மாநாட்டில் மனிதத் திறன் பற்றி திட்டமிடும் உத்திகள், ஒவ்வொரு மாநிலத்திலும் மனிதத் திறன் ஆய்வுக்குழு அமைத்தல், இத்துறையில் பணியாற்றுவோருக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பல பொருள்கள் பற்றிப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.